1422

Regd No M 878

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்

இவைகளைப் பரவச்செய்யும்

ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

5 - MAR 1924

தொகுதி 9 } காளயுக்தி௵ பங்குனிமீ
1919௵ மார்ச்சுமீ { பகுதி 11

விஷயங்கள்

1.	தற்காலநிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர், பி. ஏ.	318
2.	சாரணர் பக்கம்	319
3.	சந்தியா வந்தனம்—கே. எஸ். இராமசந்திரையர்	321
4.	இராப் பள்ளிக்கூடங்கள்—இ. எஸ். சுந்தரராஜன்	329
5.	பிரஹ்மஞான தரிசனம் (பாலபாடம்)—வி. வெங்கு சாமி ஐயர் ...	338
6.	சிறுவர் பக்கம்—தேசாபிமானம்—வி. வெங்குசாமி ஐயர்	341
7.	சமாசாரம்	320
8.	புத்தகவிமர்சம்	344

அ. ரெங்கசாமி ஐயர் B. A., B. L. பத்திராதிபர்

தபால் சார்ஜ உள்பட வருஷச் சந்தா இந்தியாவுக்கு ரூ 2

...ன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4

...ரை விக்டோரியா அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

நமது திருத்தப்பட்ட விளம்பர விகிதங்கள்.

	1 வருஷம்	9 மாதம்	6 மாதம்	3 மாதம்	1 மாதம்
1 பக்கம்	ரூ. 50	ரூ. 38	ரூ. 28	ரூ. 14½	ரூ. 5
¾ ஷை	ரூ. 38	ரூ. 28	ரூ. 20	ரூ. 11	ரூ. 4
½ ஷை	ரூ. 26	ரூ. 20	ரூ. 14	ரூ. 8	ரூ. 3
¼ ஷை	ரூ. 14	ரூ. 11	ரூ. 7½	ரூ. 4	ரூ. 1¾
1 அங்குலம்	ரூ. 10	ரூ. 7½	ரூ. 5½	ரூ. 3	ரூ. 1

அடியிற்கண்ட புஸ்தகங்களை நீங்கள் அவசியம் வாங்கவேண்டும்.

முந்துங்கள்! **விலைசொற்பம்!**

1	ஸாக்ரடீஸ் சரித்திரம்—புரொபஸர் ரெங்காச்சாரி	0—12—0
2	விக்கிரஹாராதனை—சம்பாஷணை—கே. எஸ். ராமச்சந்திரய்யர்	0—1—0
3	மீனாக்ஷிசுந்தரம்—நாடகம்-வெங்கிட்டராமய்யர்	0—6—0
4	கல்வி கற்பித்தல்—ஈசுவர கைங்கரியம் ...	0—8—0
5	எனது பிரதிக்ஞை	0—12—0
6	பிரஹ்மக்ஞானத்தின் விசாரத்தால் நமக்குறும் பயன் யாது	0—9—0
7	நமது பெரும் துரவஸ்தை—இது நீங்கும்வழி	0—8—0
8	கர்மநாசம்	0—3—0
9	சின்னங்கள்	0—3—0
10	ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள் ...	0—3—0
11	ஸன்மார்க்க முறையும் சம்சாரமும் ...	0—3—0
12	மோக்ஷம் அல்லது வீடுபெறல் ...	0—3—0
13	ஸ்தூல பிரபஞ்ச தர்மங்கள்—ஆத்மதர்மங்கள்	0—3—0
14	என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது	0—3—0
15	மகாலயபக்ஷமும் நவராத்திரியும் ...	0—1—0
16	காயத்ரி ராமாயணம்	0—1—0
17	காயத்ரி	0—1—0
18	சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம் ...	0—2—0
19	ஹிந்து என்பவன் எவன் ...	0—1—0
20	லோககுருவின் அவதாரங்கள்... ...	0—1—0
21	புத்த சரித்திரம்	0—0—6
22	தியாஸபியால் உள்ள பிரயோஜனங்கள் ...	0—2—0

தபால் சார்ஜ் வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,

மதுரை.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 9 } காளயுக்தி௵ பங்குனி௴ 1919௵ மார்ச்சு௴ { பகுதி 11

தற்கால நிலைமை.

இப்பத்திரிகையின் 9வது தொகுதியானது இதற்கு அடுத்த சஞ்சிகையோடு முடிவாகும். அதன் பிறகு 10வது தொகுதி ஆரம்பிக்கப் போகின்றது. பிரஹ்மஞானம், மதம் சாஸ்திரம், கலை, சரித்திரம், முதலிய பல விஷயங்களைப் பற்றிய அறிவைப் பரவச் செய்வதற்காக இப்பத்திரிகையானது ஸ்தாபிக்கப்பெற்றிருக்கின்றது. தமிழ் மாகாணத்தில் உள்ள பிரஹ்மஞான சபை அங்கத்தினர்களுக்குள் விசேஷமாக தமிழ் மட்டுமே அறிந்தவர்களுக்கும் ஆங்கிலம் தெரிந்தவர்களில் இப்பத்திரிகை வேண்டுமென்று கோருகிற அங்கத்தினர்களுக்கும், இப்பத்திரிகையானது இலவசமாக அனுப்பி வரப்படுகிறது. அவர்களைத் தவிர பிரஹ்மஞான சபை அங்கத்தினர்களிற் பலரும் ஏனைய அபிமானிகளும் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேர்ந்து இதனை ஆதரித்து வருகிறார்கள்.

எவ்விதமான விஷயங்களும் வியாசங்களும் கட்டுரைகளும் இப்பத்திரிகையில் விசேஷமாய் வெளிவரவேண்டும் என்ற வினவானது சுலபமாகக் கேட்கப்படும். இப்பத்திரிகையானது பிரஹ்மஞான சபை அங்கத்தினர்க்கென்றேற்பட்டது என்றும், ஆகையால் ஆரம்ப முதல் அந்தம் வரை அந்த சபையின தலைவர்களால் வெளியிடப்படும் புஸ்தகங்கள், செய்யப்படும் உபன்யாசங்கள், இவைகளைத் தமிழில் மொழி பெயர்த்து அச்சிடவேண்டும் என்றும், அப்படியில்லாமல் நவீனமாய் இந்தியாவிலும் உலகத்திலும் தோன்றும் புதிய கிளர்ச்சிகளையும், சம்பவங்களையும், பற்றி இப்பத்திரிகையில எழுதுவது, வியர்த்த மென்றும் கூறுவார் ஒரு சாரார். ஒரு சிலரோ வென்றால், இப்புத்தகத்தைப் பார்த்தால், புவர்லோகம், ஸுவர்லோகம் என்றுதான் எங்கும் இருக்கின்றதே யொழிய போதுமானமட்டில் மனோரஞ்சகமாயும் உற்சாககரமாயும் உள்ள விஷயங்களைக் காணோமே என்பார். ஆகையால் எவ்விதமான விஷயங்கள் இப்பத்திரிகையில வெளிவரவேண்டும் என்று ஆலோசிப்போம்.

***

இந்தியன் ஸெக்ஷன் காரியதரிசியால் ஆங்கிலத்தில் பிரசுரம செய்யப்படும் தியாஸபி இன் இந்தியா என்ற பத்திரிகையானது சாதாரணமாய் ஆங்கிலம் தெரிந்தவெல்லா பிரஹ்மஞான சபை அங்கத்தனருக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. ஸ்ரீமான ஜார்ஜ் அருண்டேல் அவர்கள் மார்ச் சுமீ சஞ்சிகையில் அப்பத்திரிகை இதுகாறும் நடத்திவரப்பட்ட முறையைப் பற்றிக் கடிந்து அதை எங்கனம் மாற்றவேண்டும் என்ற விஷயத்தில தமது அபிப்பிராயத்தைக் கூறுகிறார். "இந்தின ஸெக்ஷனைச் சேர்ந்த கிளைச் சபைகள பெரும்பாலும தூக்கத்தில அமிழ்ந்துகிடக்கின்றன. சிற்சில கிளைச்சபைகள விழிப்புள்ளவைகளாயிருக்கின்றன என்பது உண்மைதான், ஆனால் பெரும்பான்மையான கிளைச்சபைகள் அனேகமாய் ஓட்டமில்லாத கு

ட்டை ஜலங்கள் போல் அழுக்சேறியும், தேக்கமாயும் இருக்கின்றன. அருகில் பிரவகித்து ஓடும் நதியின் வெள்ளத்தால் ஒரு விதமான மாறுதலையும் அடையாதவைகளாய்க் காணப்படுகின்றன. வாராவாரம் அங்கத்தினர் கூடி புத்தகங்களைப் படிக்கலாம். ஆனால் அக்கூட்டங்களில் யாதொரு உற்சாகத்தையும் காண்பதரிது. பிரஹ்மஞானத்தின் உண்மைகளை எங்ஙனம் நம் சரிதையில் காட்டுவது என்பதைப்பற்றி ஆலோசிப்பதையும் காணோம். அப்படி வழக்கத்தில் நடத்தையில் கொண்டு வருவதையும் காணோம். ஆகையால் வயதில் சிறியோர் உற்சாகத்துடன் பிரஹ்மஞான உண்மைகளை ஏற்றுக்கொள்ளக்காணோம். அம்மாதிரியே தியாஸபி இன் இந்தியா என்ற பத்திரிகையிலும் தத்துவ சாஸ்திர விஷயங்களைப்பற்றி அனுத்ஸாஹகரமான வியாஸங்கள் வெளிவருகின்றன. அவைகளை வாசிக்க பெரும் பாலர்க்கு குதூகலமேயில்லை. இந்தியாவில் ஏற்படும் ஒவ்வொரு கிளர்ச்சிக்கும் பிரஹ்மஞான சபை அங்கத்தினர் தான் முதன்மையாக இருக்கவேண்டும். மேல் லோகங்களிலிருந்து வெள்ளம் போல் பிரவகிக்கும் சக்தியால் தான் இந்தியரின் பற்பல முயற்சிகள் உயிருள்ளவையாய்ச் செய்யப்படுகின்றன. அவ்விதக் கிளர்ச்சிகளை நல்ல வழிகளில் செலுத்தி லோக க்ஷேமகரமாய்ச் செய்யவேண்டுமென்றால் அவ்வித தத்துவங்களை ஒருவாறு உணரக் கூடியவர்களைத் தவிர வேறு யார்தான் யோக்கியதையுள்ளவர்கள்? பிரஹ்மஞான சபையில் தானே தற்காலத்தில் ஆத்யாத்மிக உண்மைகளை நவீன முறைகளை அனுசரித்து சாஸ்திரானுகதமாய் அறிய முயற்சி செய்யப்படுகிறது அவ்வித அறிவையுடையவர்கள் தம் அறிவைக்கொண்டு இக்கிளர்ச்சிகளை நல்வழிகளில் நடத்தவேண்டியது கடமையாகும் அதற்கு உபகாரமாயிருக்கும்படி தியாஸபி இன் இந்தியா என்ற பத்திரிகையில் உலக நடையில் ஒவ்வொரு கிளர்ச்சி விஷயமாயும் அங்கத்தினருடைய உற்சாகத்தைச் சேர்க்கக்கூடிய வியாசங்களை

டிக்கடி பிரசுரம் செய்யவேண்டும். அவ நடத்தைநிலையில் காட்டவேண்டும் சகோதர பாவம் என்ற உண்மையை நடத்தையில் விளக்கிக் காட்டவேண்டும். இவ்விதமாகச் செய்தால் சிறுவயதுள்ளவர்கள் பிரஹ்மஞான சபையில் அங்கத்தினராய்ச் சேர்ந்து தம்மையும் தம் நாட்டையும் இருதார்த்தர்களாய்ச் செய்வார்கள். அங்ஙனம் செய்வது தம் நோக்கம் என்று பத்திராதிபர் சொல்வராயின் நானும் அடிக்கடி அத்தகைய கட்டுரைகளையனுப்புவேன்" என்று ஸ்ரீமான் அருண்டேல் கூறியிருக்கிறார்.

***

உபபத்திராதிபர் இதற்கு மறுமொழியும் கூறியிருக்கிறார்: ஸ்ரீமான் அருண்டேல் கூறுகிறபடி பிரஹ்மஞானத்தை உலக அனுபவத்தில் கொண்டுவரும்படிக் கான முறைகளில் அம்முயற்சிகளுக்குக்காரணபூதமான அறிவையும் புகட்டக்கூடிய உயர் விஷயங்களைப்பற்றிய வியாஸங்களையும் பத்திரிகையில் வெளியிடுவதாயும் உத்தேசம் என்றும் கூறுகிறார். எம்முறையிலும் அப்பத்திரிகையை ஆவலுடன் யாவரும் வாங்கி வாசிக்கும்படி அவ்வளவு ரம்மியமாகச் செய்யப் பிரயத்தினப்படுவதாயும் கூறுகிறார். பிரஹ்மஞான சபையாரால் மறுபடியும் விளம்பரம் செய்யப்படும் உண்மைகளை நடத்தையில் எங்ஙனம் கொண்டுவருவது என்கிற விஷயத்தில் எல்லாருடைய உதவியும் வேண்டும் என்றும், அவ்விதமாய் அநேகர் வியாஸங்களை எழுதியனுப்பாமல் பத்திராதிபரை மட்டும்குறைகூறுதல் அடாது என்றும் கூறுகிறார்.

***

எம்முடைய அபிப்பிராயமும் அதுவே. பிரஹ்மஞானத்தைப் பாவச்செய்வது இப்பத்திரிகையின் முதற்கடமையாகும். அறிவு இருந்தால்தான் அதைக்கொண்டு நடத்தையை சீர்திருத்த முடியும். ஆகையால் நேரே அறிவை அளிக்கும் வியாசங்கள் அவசியமாகும். இரண்டாவது அறிவை நடத்தையில் மாற்றும்படிக்காக உற்சாக கரமான கட்டுரைகள் அதிகவசியம். ஆங்கிலத்தில் பிரசுரமாகும் பிர

ஞானப் பத்திரிகைகளையும் ஏனைய பத்திரிகைகளையும் படித்தோமானால் அவைகள் மனதைக் கவரக்கூடிய விதமாய் எழுதப்பட்டிருக்கின்றன. வியாசத்தின் தலைப்பெயரே மனதை இழுக்கிறது. மேலும் நடையும் குதூகலத்தைக் கொடுக்கத்தக்கதாயிருக்கின்றது. அவ்விதமாக ஏன் நமது சந்தாதார்களும், அபிமானிகளும், வியாசங்களை எழுதியனுப்பக்கூடாது? சாந்தம், தயை, பொறுமை, சத்யம் முதலிய விஷயங்களைப்பற்றி எழுதும் வியாசங்களை இக்காலத்திற்கேற்ற உதாகரணங்கள், சமத்காரங்கள், சமாதானங்களுடன் மகுடத்தையும் மனதைக்கவரக்கூடிய விதமாய் அமைத்தால் சிலாக்கியமாகாதா?

***

மேலும் நமது பத்திரிகையைப் படிப்போர்களில் எத்தனை பேர் சிற்பசாஸ்திரம், சித்திரம், முதலிய கலைகளைப் போதிக்கும் புராதன ஸம்ஸகிருத நூல்கள் தமிழ் சாஸ்திரங்களைப்படித்திருக்கலாம்? அவர்கள் சிற்பத்தின் தத்துவத்தை மனோரஞ்சகமாய் ஏன் எடுத்துக்காட்டக் கூடாது? இவ்விதமாகவே நமது பத்திரிகையின் நோக்கத்தில் அடங்கிய ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் நேயர்கள் கொஞ்சம் சிரத்தையெடுத்து வியாஸங்கள் எழுதியனுப்புவார்களானால் நாம் எவ்வளவோ நன்றி பாராட்டுவோம்.

***

நமது பத்திரிகையானது தமிழ் நாடெங்கும் பரவுகின்றதாகையால், ஆங்காங்கு நிகழும் சம்பவங்களைத் தமிழிலேயே சுருக்கமாயும் இன்பம் தரத்தக்கவிதமாயும் எழுதியனுப்பினால் மற்ற இடங்களில் உள்ளவர்களுக்கு அவை தூண்டுகோலாக இருக்கும். அநேகர் இவ்விதமாய் சமாசாரங்களையும் அனுப்புகிறதில்லை. ஒரு வேளை ஒரு குறிப்பு அனுப்பினாலும் அது ஆங்கிலத்தில் தான் அனுப்பப்ப

டுகிறது. தமிழில் எழுதியனுப்புவது மிகவும் சிரமசாத்தியமோ? அல்லது தமிழுக்கு அவ்வளவு கௌரவம் கொடுத்தல் தகாதோ?

***

ஆங்கிலத்தில் வெளிவரும் வியாஸங்களைத் தமிழ்ப்படுத்தி அனுப்பினாலும் சரி, அப்படியில்லாமல் ஒரு விஷயத்தைப்பற்றிச்சிந்தனை செய்து தனி வியாஸங்களாய் அனுப்பினாலும் சரி, நேயர்கள் கொஞ்சம் சிரமம் எடுத்துக்கொண்டு இப்பத்திரிகைக்கு விஷயதானங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பத்திரிகையை சிலாக்கியப்படுத்தும் பொறுப்பை பத்திராதிபருடன் நேயர்களும் ஏற்றுக்கொள்ளவேண்டியதவசியமாகும்.

***

இளவு தூரம் இவ்வவிஷயத்தைப்பற்றிக் கூறியது யாதுகாரணம்பற்றியெனில் 10-வது புஸ்தகம் துவக்கும்போது இப்போதிருப்பதைவிட இன்னும் மனோஞ்சமாயும், உபயோகமுள்ளதாயும், அறிவைப்பரவச் செய்யத்தக்கதாயும் இப்பத்திரிகையைச் செய்யலாம் என்று எண்ணங்கொண்டு தான் எழுதினோம்.

***

இதுவரை இப்பத்திரிகைக்கு விஷயதானங்கள் செய்தயாவருக்கும் வந்தனமளிப்பதுடன் அவர்களும் இன்னும் அடிக்கடி அப்படியே செய்து வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆர். ரெங்கசாமி ஐயர்.

சாரணர் பக்கம்

மதுரை ஸ்ரீமீனாக்ஷி தேவஸ்தானம் கமிட்டி மெம்பர்களில் ஒருவர் காலம சென்று போய்விட்டதினால் அவருக்கு பதிலாக வேறு ஒருவரை ஜனங்கள தேர்நதெடுப்பதற்காக மேற்கூறிய கமிட்டியார் மதுரை ஸ்ரீமீனாக்ஷியம்மன் கோவிலில் ஆயிரக்கால் மண்டபத்தில் மார்ச்சுமீ 30-யன்று வோட் எடுக்கப்படும் என்று விளமபரம் செய்திருந்தார்கள். வோட் கொடுக்கத் தகுதியுள்ள எவர்களின் தொகை 13,000. அந்ததினம் அமைதியாயும ஒழுங்காயும், ஜனங்கள் வந்து இருந்து வோட் போட்டுவிட்டு போக வேண்டியதவசியமாகையால் அதற்கு உதவியாயிருக்கும்படி இந்தியச சாரணர் சங்கக் காரியதரிசிக்கு நிருபம் வந்தது. அதற்கிணங்கி மேற்கூறிய சாரணா சஙகததா 35 சாரணர்களை அனுப்பினாகள். அவாகள அன்று காலை 5-30 மணி முதல் மாலை 5 மணி வரை ஒழுஙகாயும, சுறுசுறுப்பாயும் வேலை செய்தார்கள். ஜனங்களை எநத எந்த இடத்துக்கு போகவேண்டும் என்று மரியாதையாகவும், அமரிக்கையாகவும சொலலி ஒரு கடுஞ் சொல்லில்லாமல் யாவருக்கும் திருப்திகரமாய் சாரணா நடந்துகொண்டார்கள். அன்று மாலையில கமிட்டி மெமபர்களில் ஒருவரான ஸ்ரீமான் இராமனாதன செட்டியாரவாகள் சாரணர்களுக்கு வநதனம அளித்தார்.

அதற்குப்பின நடந்த சித்திரை உற்சவத்திலும், சாரணர்கள் ஜனங்களுக்கு உபகாரமான கைஙகரியம செய்தனர். தென் இந்தியாவில பற்பல பாகஙகளிலிருந்து ஏராளமான ஜனஙகள மதுரையில சுவாமி தரிசனததுறகாக வருகிறது வழக்கம். அவர்களுக்கு மல ஜல பாதைகளுக்குப போகும இடம் தெரியாமல் அவாகள தவிபபதும உணடு. எநத தணணீரைத் சாப்பிடலாம் எதைத் தவிர்ககவேணடும என்று அவாகளுக்கு காட்டவேண்டியதவசியம். கூட்டத்தில தாயைவிட்டுப் பிள்ளை தவறித் தவிப்பதும் உண்டு. நகைபூண்டு வேடிக்கை பார்க்கவரும் பெண் பிள்ளைகளின் கழுத்தில அணிந்திருக்கும் நகைகளை கைலாகவத்தால் கவரும் புணயவான்களும் கூட்டத்தில் வருவதுணடு. ஆகையால் இப்பெருஙகூட்டங்களில் மரியாதையுடனும், அன்புடனும், ஜனங்களுக்கு வழியைக் காட்டி உபகரிக்கக கூடிய வாலிபர்களை ஜனஙகள என்றும வாழ்த்துவாாகள். அவ்விதமான கைங்கரியத்தை மதுரைச சாரணாகள செயதாாகள. இவ்விதமாக அடிக்கடி ஜனோபகாரத்தைச் செய்து வருவார்களாக.

சமாசாரம்.

தஞ்சை ஜில்லா சம்போ மகாதேவியில் நாளிது மார்ச்சுமீ 22, 23உ களில் பிரஹ்மஞான கான்பரன்ஸ் நடந்தது. இது தென் இந்தியா ரெயில்வே ஸ்டேஷன் கீவளூரை அடுத்து 6 மைலுக் கப்பாலிருக்கின்றது. அக் கான்பரன்ஸில ஸ்ரீமான் சகோ எம். என். ராமசுவாமி ஐயர் அவர்கள் எம். ஏ அக்கிராஸனாரயமர்ந்தார். சகோதரபாவத்தை நடத்தையில் காட்டவேண்டிய தவசியம் என்று அக்கிராஸனர் வற்புறுத்தினார். ஸ்ரீமான் சகோ நீலகண்ட சாஸ்திரிகள் இக்காலத்தில் இந்தியாவுக்கு ரிஷிகள் செய்யும் உபதேசத்தைப் பற்றி உபந்யஸித்தார். அதற்குப் பிறகு சகோ. எஸ். ராஜாராமையர் உலககுரு சீக்கிரத்தில் வரப்போகிறார் என்று பறைசாற்றினார். மேற்கூறிய எல்லா உபந்யாஸங்களையும் சபையோர் செவிசாய்த்து ஆவலுடன் கேட்டானந்தித்தார்கள். நாகர்கோவிலிருந்து வந்திருந்த சகோ. இ. வி. நாராயணையர் அவர்கள் வெகு அழகாய் சந்திர ஹாஸ சரித்திரத்தை இனிய கானத்துடன் ஹரிகதை ரூபமாய்க் கூறினார். வழக்கமாய் ஹரி கதைகளில் உபயோகிக்கும் சில்லுண்டி உபகதைகள, வேடிக்கைக் கூற்றுகள் இல்லாமல் ஆரம்பமுதல் அந்தம் வரை உயர்ந்த எண்ணங்களால் நிரம்பியிருந்தது. ஹரிகதை என்றால் இப்படியல்லவோ இருக்கவேண்டும் என்றும் கேட்போா மனத்தில் உணர்த்தியது.

ஞாயிற்றுக்கிழமை மாலையில் 200 ஸதிரீகள் கூடிய ஸபையில் எம. என். இராமசுவாமி ஐயர் அவர்கள் மனைவியாரும் ராஜாராமையா அவர்கள் மனைவியாரும் உபந்நியாசங்கள் செய்தார்கள். ஸ்ரீராமாயணத்தில் அன்பு, சகோதர பாவம் என்று இரண்டு உத்தம குணங்களும் எப்படி உத்தமபாத்திரங்களால் காட்டப்பட்டிருக்கின்றன என்ற விஷயத்தை ஸ்ரீமதியாகிய அக்கிராஸனர் மனைவியாரும் ஸ்திரீகளுக்குப்படிப்பு அவசியமென்பதைப்பற்றி ராஜாராமையர் மனைவியாரும் பிரசங்கித்தார்கள். அச்சபையை அலங்கரித்திருந்த ஸ்ரீமதிகள் அனைவரும் இருவர் உபந்நியாசங்களையும் நன்கு ஆதரித்தார்கள்.

சிறிய கிராமத்தில்கூட இவ்வளவு விமர்சையாக பிரஹ்மஞான கான்பரன்ஸ் நடந்ததும், வந்திருந்த அனைவருக்கும்வேண்டிய சௌகரியங்களை அவ்வூர் நிர்வாககாரிகள் செய்ததும் யாவரும் பாராட்டத்தகுந்தவைகள்.

சந்தியா வந்தனம்
ஓர் சம்பாஷணை.

இராமாநந்தர்:—ஓய்! சுந்திரசாஸ்திரிகளே! என்ன உம்மை நிரம்ப நாளாய்க் காணோமே?

சுந்தரசாஸ்திரி:—சொந்த ஜோலியாய் பல ஊர்களுக்குப் போயிருந்தேன். நேற்றுத்தான் வந்தேன்.

இரா:—இப்பொழுது வந்த விசேஷமென்ன?

சுந்:—முன்னே எனக்கு சர்வசமயத்தைப்பற்றியும், ஸ்ரீ கிருஷ்ணபகவானைப்பற்றியும், தெளிவாக எடுத்துரைத்தது மன்றி விக்கிரஹஆராதனை விஷயமாய் எனக்கு இருந்த சந்தேகங்களையும் நிவர்த்தி செய்தீர்கள். இப்பொழுது சந்தியா வந்தனத்தைப் பற்றிச் சில விஷயங்கள் தெரிந்து கொண்டு போகலாமென்று வந்திருக்கிறேன.

இரா:—நீர் உபாத்தியாயர் விருத்தியை (புரோஹிதவிருத்தியை) அனுசரித்து வருவதாயும் அதற்காகவேண்டிய வேதாத்தியயனம் செய்திருப்பதாகவும் தெருவித்திருக்கிறீர் அல்லவா? மேற்படிமுறையில் எத்தனையோ பையன்களுக்கு உபநயனஸம்ஸ்காரம் செய்து வைத்திருப்பீரே? உபநயன காலத்தில் தானே சந்தியாவந்தன மந்திரங்கள் உபதேசிக்கப்படுகின்றன? அப்படி யிருக்க அது விவரம் தெரியாமலா நீர் இதுவரை உபநயன ஸம்ஸ்காரங்கள் செய்து வைத்திருக்கிறீர்?

சுந்:—நான் சாஸ்திரம் வாசித்தவ னல்லன் என்றும் வேதாத்தியயனம் மட்டில் செய்திருக்கிறேன் என்றும் அதற்கு அர்த்தத்தை தெரிந்து கொள்ளவில்லை என்றும் ஏற்கனவே நான் தெரிவித்திருக்கிறேன். என்னை வீணாக பரிஹாஸம் செய்யாமல் சந்தியாவந்தனம் செய்வதின் அவசியம், அதன் பொருள், இவைகளைப்பற்றி எனக்குத்தெளிவாய் எடுத்துரைக்கக் கோருகிறேன்.

இரா:—சந்தியாவந்தனத்தில் உயர்ந்த தத்துவங்கள் அடங்கி இருக்கின்றன. வியாஸபகவான் அருளிச்செய்திருக்கும் ப்ரஹ்மஸூத்திரத்திலும், பகவத்கீதை முதலிய உயர்ந்த கிரந்தங்களிலும் கற்பிக்கப்படும் தத்துவங்களை சாதாரணமாய் ஜனங்கள் அறிந்து உஜ்ஜீவிக்கும் பொருட்டு அக்கருத்துக்கள் அடங்கிய மந்திரங்களை அன்பு நிறைந்த ரிஷிகள் சந்தியாவந்தனத்தில் அமைத்திருக்கின்றனர். முதலில் மந்திரங்களை சரியானபடி உச்சரிப்பதால் ஒருவிதமான சக்தி ஏறபட்டு அதனுல் ஒரு பலன் உண்டாகும் என்பதை கவனிக்க வேண்டும். தேகசுத்தியானது ஸ்நாநம் முதலியவைகளாலும். அந்தக்கரண சுத்தியானது நல்லெண்ணங்களைக் கொளவதாலும்ஏற்படும். அந்தக்கரணசுத்தியோடு தேவதைகளைபிரார்த்திப்பதால் சரியான பலன் கிடைக்கும். இதை ஒவ்வொருவரும் நன்ருய் கவனித்து நடப்பது உசிதம். இக்காலத்தில் மேல நாட்டாருடைய படிப்பையும் நாகரீகத்தையும் கைப்பற்றுகிறவர்கள் இந்த சந்தியாவந்தனத்தின் மகிமையை அறியாமல் சந்தியாவந்தனம் செய்வதையே அநேகர் விட்டுவிடுகிருர்கள். இதுநிரம்பவும் பரிதபிக்கவேண்டிய விஷயமே. இவ்வித நிலைமைக்கு முக்கிய காரணம் புரோஹிதவிருத்தியை அனுசரித்து வருகிறவர்களும் பெற்றேருர்களும் இதன உண்மையை நன்கு உணர்ந்து பிள்ளைகளுக்கு எடுத்துரைக்காயல் இருப்பதும் பொதுவாக அனுஷ்டிக்காம லிருப்பதுமே.

சுந்:—அதனுல்தான் நான் விபரப்கேட்க வந்திருக்கிறேன். இதுவரையில் தெரிந்து கொள்ளாமலிருந்தது என் பிசகுதான். வீண் கால ஹரணம் செய்யாமல் தயவு கூர்ந்து எடுத்துரைக்கப் பிரார்த்திக்கிறேன்.

இரா:—சந்தியா என்ற பதத்திற்கு இரண்டு(காலங்கள் கூடுகிறதுஎன்று அர்த்தம். இரவும் பகலும் கூடுகிற காலத்திற்கு காலைஎன்றும், பகலும் இரவும் கூடுகிற காலத்திற்கு மாலை என்றும்சொல்வது வழக்கம். அதாவது சூர்யோதயத்

த்தையும் சூரிய அஸ்தமனத்தையும் குறிக்கிறது. இக்காலங்களில் ஈசுவரனை பஜிப்பதற்காக சந்தியாவந்தனம் ஏற்பட்டிருக்கிற தென்று ஆன்றோர் அபிப்பிராயம்.

சுந்:—மத்யாஹ்ன காலத்தில் மாத்யாஹ்நிகம் செய்கிறார்களோ? அதன் விபரமென்ன?

இரா.—சூரியன் தலை உச்சிக்கு நேரேவரும் காலம் மத்தியதினம் ஆகிறது. இந்த காலத்தில் சில இடங்களில் உள்ள நம் தேசத்தார் மாத்தியாஹ்நிகம் செய்கிறதில்லை என்று தெரிகிறது. ஆனால் தென்னிந்தியாவில் உள்ள பிராமணர்கள் இதை அனுசரித்தே வருகிறார்கள். சில இடத்தில் அனுசரித்தும் அனுசரியாமலும் இருப்பதைப்பார்த்தால், காலையிலும் மாலையிலும் சந்தியாவந்தனம் செய்யவேண்டியது அவசியம் என்றும், மத்தியாஹ்ந காலத்தில் அதை அனுசரிக்க வேண்டியது அவ்வளவு கட்டாயம் அல்லவென்றும், சில பெரியோர்கள் அபிப்பிராயப் பட்டிருக்கலாமென்று நினைக்க ஹேதுவாகிறது. இது எப்படி இருந்தாலும் அவரவர் குடும்ப ஆசாரத்தை அனுசரித்து நடப்பது உசிதம்.

சுந்:—சந்தியா வந்தனம் செய்ய வேண்டிய காலத்தை இன்னும் விவரமாகக் குறிப்பிட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இரா:—சூரியன் அஸ்தமிக்கிற காலம் முதல் நக்ஷத்திரம் உதயமாகும் வரை மாலை சந்தியாகாலம். நக்ஷத்திரமெல்லாம் மறைவது முதல் சூரியோதயம் வரை காலை சந்தியாகாலம். ஆனால் மாலை சந்தி சூரியனோடு கூடியது உத்தமம். நக்ஷத்திரம் உதயமாகாத சாயங்காலம் மத்திமம். நக்ஷத்திரத்தோடு கூடியது அதமம். காலை சந்தி நக்ஷத்திரத்தோடு கூடியது உத்தமம். நக்ஷத்திர மில்லாதது மத்திமம் சூரியனோடு கூடியது அதமம். மாத்தியாஹ்நிக சந்தி மத்திய தினத்தில் உத்தமம். ஸங்கவத்தில் அதாவது உச்சி

நேரத்திற்குக் கொஞ்சம் முந்திய காலத்தில் மத்திமம். அபராஹ்னத்தில்அதமம். இவ்விடத்தில் 'காணுமல் கோணுமல் கண்டு கொடு' என்ற வசனம் கவனிக்கத்தக்கது.

சுங்:—சந்தியா வந்தனத்தில் அர்க்கியம், உபஸ்தானம், ஜபம், இம்மூன்று அம்சங்கள் அடங்கியிருக்கின்றனவே. அவைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் விபரம் தெரிய விரும்புகிறேன்.

இரா:—முதலில் ஆசமனம் செய்கிறோம். அதாவது உலகத்தின் பரிபாலன கர்த்தாவாகிய விஷ்ணுவின் நாமங்களில் மூன்று நாமங்களைச் சொல்லி ஜலத்தைப் பானம் செய்கிறோம். விஷ்ணுவின் பெயரால் சக்தி அமைந்த ஜலத்தை உட்கொள்வதில் சரீரத்தின் உள்பாகம் சுத்தி செய்யப்படுகிறது. அப்பால் விஷ்ணுவின் பல பெயர்களைச் சொல்லி வலது கையின் பல விரல்களால் தேகத்தில் குறிப்பிட்ட பன்னிரண்டு இடங்களில் தொடுவதால் சரீரத்திற்கு வெளிப்பக்கம் பரிசுத்தமும் சக்தியும் ஏற்படுகிறது. ஆசமனம் ஆன பிறகு சந்தியா காலத்தில் உபாஸகனுக்கு யாதொரு கெடுதலும் நேரிடாதபடி விஷ்ணுஸ்வரூபியான பரமாத்மாவை பிரார்த்தனை செய்து கொண்டு பிராணுயாமம் செய்யப்படுகிறது. பிராணுயாமம் என்றால் மூக்கினுடைய இடது துவாரத்தினல் வாயுவை பூரித்து. ஹிருதயத்தில் அதைச் சலியாமல் நிறுத்தி, வலது மூக்கு துவாரத்தினல் வெளிப்படுத்துகிறது உள் சுத்திக்கு ஸாதனமாகும் பிராணுயாமத்தின் லக்ஷணம், இம்மூன்று வியாபாரங்களுக்கும் முறையே 'பூரகம்' 'கும்பகம்' 'ரேசகம்' என்று பெயர். ஓம்பூ: என்று ஆரம்பிக்கும் மந்திரத்தை கும்பகம் செய்யும்போது சொல்ல வேண்டியது. ஓம்பூ: என்ற மந்திரங்களில் ஈசுவரன் ஏழு உலகஸ்வரூபியாயும், சச்சிதானந்தஸ்வ ரூபியாயும் எல்லாரும் பூஜிக்கும் உன்னதஸ்தானத்தில் இருப்பவரும், எல்லா ஸ்ருஷ்டிக்கும் காரணஸ்தராயும், ஜோதிஸ்ரூபமாயும் சத்தியமாயும், சர்வவி

யாபியாயும் உள்ள பரமாத்மாவை தியானிக்கிறேன் என்று பொருள். கும்பகம் செய்யும் முறை மூக்கின் ஒரு துவாரத்தை கட்டை விரலால் மூடிக்கொண்டு மற்ற துவாரத்தை மற்ற கடைசி இரண்டு விரல்களால் மூடிக்கொள்ள வேண்டும். ப்ராணாயாமம் செய்வதினால் ஆஹாராதிகள் சரியானபடி ஜீர்ணமாகும் என்றும் மலப்பிரவிருத்தி சரியாக ஏற்படும் என்பதையும் சொல்ல வேண்டியதில்லை. கும்பக காலத்தில் ஓம் பூ: முதலிய மந்திரங்களின் தாத்பரியமாகிய பிரஹ்மத்தை ஹிருதயத்தில் தியானம் செய்து கொள்ள வேண்டும். இதில் சிலர் மூன்று பிராணாயாமும் சிலர் ஒன்றும் செய்கிறார்கள். அது அனுஷ்டான பேதம்.

பிறகு சங்கல்பம் செய்யவேண்டியது. சங்கல்பமாவது இரண்டு உள்ளங்கைகளையும் மேலும் கீழுமாக ஒன்றுசேர்க்கும் காலத்தில் பிரியாமல் இருப்பது போல ஈசுவரஸ்வரூபமும் அதை தியானம்பண்ணும் சித்தமும் இரண்டும் ஒன்றுபட்டுப்பிரியாமல் இருக்கவேண்டும். அவ்விதமிருக்க உத்தேசிக்கிறேன் என்பதைக் காட்டுவதற்கு அறிகுறியாக ஏற்பட்டிருக்கிறது.

அப்பால் ஆபோஹிஷ்டாதி மந்திரங்களை உச்சரித்து ஜலத்தை புரோக்ஷணம் செய்து கொள்வதில் வெளிச்சுத்தம் ஏற்படுகிறது. இதில் ஒன்பது மந்திரங்கள் மூலமாய் இகத்திலும் பரத்திலும் சுகத்தைக் கொடுக்கும்படி ஜலரூபியான பரமாத்மா பிரார்த்திக்கப்படுகிறதே தவிர, பரமாத்மாவையன்றி சுத்த ஜலத்தை பிரார்த்திப்பதாக அர்த்தம் கொள்ளக்கூடாது. காலையில் சூர்யஸ்ச என்று ஆரம்பிக்கும் மந்திரத்தாலும் மாலையில் அக்னிஸ்ச என்று ஆரம்பிக்கும் மந்திரத்தாலும் சக்தி ஏற்பட்ட ஜலத்தை உட்கொள்வதால் உள்சுத்தி ஏற்படுகிறது. அத்துடன் கோபமென்ன, துவேஷமென்ன, இவைகளினால் தூண்டப்பட்டு மனோவாக்கு காயங்களினால் செய்யப்படும் பாபச்செயல்களை சூரியன் அக்னி என்ற தேவதைகள் ரூப

மாயிருக்கும் பரமாத்மா போக்கடிக்கட்டும் என்று பிரார்த்திக்கப்படுகிறது. மாத்யாஹ்ந காலத்தில் ஆபஃபுனந்து என்று ஆரம்பிக்கப்படும் மந்திரத்தால் அபிமந்திரிக்கப்பட்ட ஜலத்தை உட்கொள்வதால் உள் சுத்தி ஏற்படுகிறது. இம் மந்திரத்தினுல் மழை ஜலம் பூமியில் விழுவதற்கு முன் ஆபோசனத்திற்கு லாயக்கில்லை என்றும், பூமியில் விழுந்த மேல்தான் சக்தி அடைவதாயும் தெரியவருகிறது. சுகாதார விதிகளுக்கு விரோதமான ஆகாரங்களைப்புஜிப்பதால் உண்டாகும் ஆரோக்கியக்கெடுதிகளை நீக்கும்படிக்கும் மனோவாக்கு காயம் இவைகளால் உண்டாகும் பாபச்செயல்களை போக்கடிக்கும்படிக்கும் ஜலரூபமான பரமாத்மாவை பிரார்த்திக்கிறோம். காமாதிகளால் தூண்டப்பட்டுச் செய்யப்படும் பாபச்செயல்கள் பரமாத்மாவினுடைய தேஜஸாகிய அக்னியில் ஆகுதி செய்யப்படுகின்றன என்பது மேற்கண்ட மூன்று மந்திரங்களின் தாத்பரியம். அதை நன்கு உணர்ந்து பரமாத்மாவை சிந்தனை செய்து கொண்டு ஜலத்தைப் பானம்பண்ணும் பக்ஷத்தில் இரவிலும் பகலிலும் அவரவர் செய்யும் பாபங்கள் நீங்கி பரிசுத்தராவார் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

"ததிக்ராவிண்ணோ அகாரிஷம்" என்று ஆரம்பிக்கும் மந்திரத்தினுல் தேக சௌக்கியம் ஆயுள் விருத்தி மனச்சுத்தி இவைகளைக்கோரி அக்னிரூபமான பரமாத்மா பிரார்த்திக்கப்படுகிறார். இந்த மந்திரத்தின் முடிவில் புரோக்ஷணம் செய்து கொள்ள வேண்டியது. ஆரம்பத்தில் செய்து கொள்வது உசிதமல்ல என்று ஆன்றோர் அபிப்பிராயம். ஆபோஹிஷ்டாதி மந்திரங்களுக்கு முன்போல் அர்த்தம் செய்து கொள்ள வேண்டும். காலையிலும் மாலையிலும் காயத்ரி மஹா மந்திரத்தால் அபி மந்திரிக்கப்பட்ட ஜலத்தால் மூன்று தாமும் மாத்யாந்ஹ காலத்தில் இரண்டு தாமும் அர்க்கியப்பிரதானம் செய்கிறோமல்லவா? இவைகள் ஸூர்யனைப்பீடிக்கும் அஸுரர்களைச்சிக்ஷிப்பதற்காக பாணங்களைப்போல் உபயோகப்படுகின்றன என்று பெரியோர்

களின் அபிப்பிராயம். இந்த அஸுரர்களைப்பிடிக்கும் ரூப மான தோஷ நிவர்த்திக்காக மேற்கண்ட அர்க்கியங்களுக் குப் பிறகு ஒரு பிராணாயாமம் பண்ணி ஒரு அர்க்கியம் கொடுக்கிறார்கள். இதற்கு ப்ராயச்சித்த அர்க்கியம் என்று பெயர்.

இந்த அர்க்கியம் கொடுத்த பிறகு ஜலத்தை இர ண்டு கைகளிலும் எடுத்துக்கொண்டு தன்னைத்தானே ஒரு தரம் சுற்றி ஜலத்தைக் கீழேவிட்டு விட்டு "அஸாவாதித் யோப்ரஹ்ம" என்று சொல்லி மார்பில் இரண்டு கை களையும சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். அதா வது ஸூர்ய மண்டலத்தில் இருப்பவனும் என் ஹிருதயத் தில் இருப்பவனும் ப்ரஹ்மந்தான் என்று பொருள். மேற் கண்ட அஸுரர்கள், என்பது காமம், குரோதம், முதலிய ஆறையும், ஆறு அஸுரர்களாகவும் பாவிக்கலாம்.

சுந்:—அஸாவாதித்யோ ப்ரஹ்ம என்பதின் பொரு ளை விவரமாகச் சொல்ல வேண்டும்.

இரா:—ஆதித்யனும் பரமாத்மாவும் ஒன்று என்பதை க்குறிக்கிறது. இது அடியில் கண்ட சுலோகத்தால் நன்கு விளங்கும். மேற்கூறிய மந்திரத்தைச்சொல்லி இரண்டு கை விரல்களையும சேர்த்து மார்பில வைத்துக் கொள்வதால் ஜீவாத்மாவுடையவும ஹிருதயகமல வாஸியான பரமாத்மா வுடையவும் ஐக்கியத்தைக்குறிக்கிறது. மேலும்துவைத பக்ஷத் தில இவர்கள் ஓரே தன்மை உடையவர்களென உணர்த்து கிறது.

कोयं देहे चेष्टयितान्तःकरणस्थः।
सूर्ये चासौ तापयिता सोस्म्यहमेव ॥
इत्यात्मैक्योपासनयायं विदुरीशं
तंस सारध्वान्तविनाशं हरिमीडे ॥

அந்தக் காரணத்திலிருந்துகொண்டு தேகத்தில் யார் சேஷ்டித்துக் கொண்டிருக்கிறானோ யார் சூர்ய மண்டலத்தில் இருந்துகொண்டு தபிக்கிறானோ அவ்விரண்டுபேரும் நானே இவ்விதம் ஆத்மா ஏகம் என்று உபாஸனை செய்வதால் எந்த ஈசுவரனை அறிகிறார்களோ அந்த ஸம்ஸாரமாகிற இருட்டை போக்கடிக்கிற ஹரியை நான் ஸ்தோத்திரம் செய்கிறேன்.

சுந்:—ஆதித்யந்தர்பயாமி முதலியவை எதன் பொருட்டு செய்யப்படுகின்றன.?

இரா:—நவக்கிரகங்களையும் விஷ்ணுவையும் பிரார்த்தனை பண்ணி அர்க்கியம் செய்யப்படுகிறது. ஜப காலத்தில் நவக்கிரகங்கள் பீடிக்காமலும் மனம் சலிக்காமல் ஒரு முகப்பட்டு இருக்கும்பொருட்டு ரக்ஷகராகிய விஷ்ணுவின் திரு நாமங்களையும் அவரது ஆக்ஞையை வகித்த அதிகாரிகளான நவக்கிரகங்களின் பெயர்களையும் சொல்லி அர்க்கியபடி கொடுத்து அவர்களைத் திருப்தி செய்வித்து ஆசமனம் செய்யப்படுகிறது.

சுந்:—காலையிலும், மத்யாஹ்னத்திலும் கிழக்கே பார்த்தும் சாயந்திரம் மேற்கே பார்த்தும் அர்க்கியப்ரதானம் செய்யப்படுகிறதே, அதன் விவரமென்ன?

இரா:—காலையில் சூரியன் கீழ்திசையில் உதிப்பதால் அத்திசையை நோக்கி அர்க்கியப்ரதானம் செய்யப்படுகிறது. மாத்யாஹ்ன காலத்தில் சூரியன் கீழ்திசைக்கும் மேல்திசைக்கும் நடுவில் இருந்தாலும் கிழக்கைப்பார்த்து அர்க்கியம் கொடுக்கப் படுகிறது. ஸாயந்திர காலத்தில் சந்தி செய்ய வடக்கே பார்த்து ஆரம்பித்தாலும் மேற்கே பார்த்தே அர்க்கியம் விடுகிறார்கள். ஏனென்றால் சூரியன் மேற்கே இருப்பதனால் அப்படிச் செய்கிறார்கள்.

(தொடரும்.)

கே. எஸ். இராமச்சந்திரையர்,

* இராப்பள்ளிக்கூடங்களும் அவைகளைச் செவ்வையாய் நடத்துவதற்கு சில யோசனைகளும்.

---

1. இராப்பள்ளிகள் யாருக்கு உபயோகம்:—பகல் காலத்தில் வேலை செய்பவர்கள அதாவது தச்சர்கள், வியவசாய வேலைக்காரர்கள், அசசுக்கோர்ப்பவர்க்ள், வீட்டு வேலைக்காரர்கள், இவர்களுக்குத்தான் முக்கியமாய் உபயோகம். ஏன் என்றால், அவர்கள் சிறுவர்களாய் இருக்கும்போது எழுதப்படிக்கக்கூடக் கற்றுக்கொள்ள சௌகரியங்கள் ஏற்படவில்லை. பஞ்சமர் முதலிய தள்ளுண்ட ஜாதியைச்சேர்ந்த சிறுவர் சிறுமியர்களுக்கும் இவ்விராப்பள்ளிகள் உபயோக முள்ளவைகள். ஏன் என்றால் அவர்களுக்கு எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆவல் மிகுதியா யிருந்தாலும், மேல் ஜாதியாருடன் சேர்ந்து பகற் பள்ளிக்கூடங்களில் படிக்கமுடிகிறதில்லை, மேலும், பகற் பள்ளிக்கூடங்களில் படிக்க முடியாதபடி அவர்கள் வீட்டு வேலைகள் செய்ய வேண்டிய தவசியமாயு மிருக்கிறது.

2. இராப்பள்ளிகளைத் துவக்குவதற்குமுன் நாம் செய்ய வேண்டிய தென்ன? எந்தத்தெரு அல்லது ஊரிலிருந்து இராப்பள்ளிக்கு மாணாக்கர்கள் வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களோ, அந்தத் தெரு அல்லது ஊரில் பற்பல பாகங்களில் சிறு கூட்டங்கள் கூட்டி, இராப்பள்ளியில் சேர்ந்து வாசிப்பதால் என்ன என்ன பிரயோஜனங்கள் உண்டு என்றும், தினந்தோறும் படிக்கத் தெரியாததால் என்ன கெடுதிகள் ஏற்படுகின்றன வென்றும், தினசரிப் பத்திரிகைகள், ஊரில் இருந்துவரும் கடுதாசிகள் இவைகளை வாசிப்ப

---

* நியூ இந்தியா என்ற தினசரி ஆங்கில பத்திரிகையின் 1-3-19 சப்ளிமெண்டிலிருந்து மொழி பெயர்ப்பு.

தற்காக வேறு ஒருவரைத் தேடவேண்டியதில்லை யென்றும் தாமாகவே கடிதங்கள் எழுதலாம் என்றும், வியாபாரிகளும் கடன் கொடுத்தவர்களும் ஏமாற்ற முடியாதென்றும். இவைபோன்ற மற்ற நலங்களையும் எடுத்துரைக்க வேண்டும், அப்பால் அந்தத் தெருவில் அல்லது ஊரில் பள்ளிக்கூடம் வைக்கப்போகிறோம் என்று பறை சாற்ற வேண்டும், துண்டுப்பத்திரிகைகளை, பிரசுரிக்கவேண்டும். தினப்பத்திரிகையில் பிரசுரித்தல், சுவற்றில் விளம்பரக் கடுதாசிகளை ஒட்டுதல், இவை மூலம் பகிரங்கப்படுத்த வேண்டும்.

இராப்பள்ளிக்குச் செலவுக்குப் பணம்தேடல்: பள்ளிக்கூடத்தைத் துவக்கியாய் விட்டது. ஆனால் அதன் செலவுக்கு என்ன செய்கிறது? ஒரு பள்ளியைத் துவக்கும் முன்னும், துவக்கின பிறகும் பணத்திற்கு என்ன செய்வது, எவ்வளவு பணம் செலவழிப்பது என்று ஒரு திட்டம் ஏற்படுத்திக்கொள்வது நலம். அமெரிக்காவில் ஒய். எம். ஸி. ஏ. என்ற சங்கத்தை நடத்தும் விஷயமாய் ஹாவொர்த்து என்றவர் கூறியிருக்கும் புத்திமதியை இங்குக் கூறுவோம்.

"திட்டம் என்றால் குறிப்பிட்ட காலத்திற்கு, வழக்கமாக ஒரு வருஷத்திற்கு, இவ்வளவு வரவு ஆகும் இவ்வளவு செலவாகும் என்று கவனமாக முன்னமே தீர்மானிக்கப்பட்ட ஏற்பாடாகும். ஒரு வருஷம் முடியும் முன், அடுத்த வருஷத்தில் எவ்வளவு ரூபா யிருந்தால் இந்த வருஷத்தைக் காட்டிலும் அதிகமான விருத்தியைக் காட்டலாம் என்றும், அப்படிச் செய்ய வேண்டிய பொருளை யெங்ஙனம் தேடுவது என்றும் முன்னமே ஒரு சிறு கமிட்டி கூடித்தீர்மானிக்க வேண்டும். எவ்வளவு அபிவிருத்தியைக் காட்ட வேண்டும் என்பது சந்தர்ப்பத்தைப்பொறுத்தது. சந்தாதார்களிடம் இருந்து எவ்வளவு பணம் எதிர் பார்க்கலாம், எவ்வளவு பணம் இதர துறைகளிலிருந்து வரலாம், எவ்வளவு இனமாகப் பெறலாம் என்று தீர்மானிக்க வேண்டியது அடுத்த படி. முற் கூறிய இரண்டிலிருந்தும் கிடைக்க வே

ண்டியதை நிச்சயம் செய்து கொண்டு, பிறகு மூன்ருவது துறையான இனும் கொடையைப்பற்றித் தீர்மானிக்க வேண்டும்.

"பொது ஜனங்களிட மிருந்து பணம் தேவையாஞல் நம்முடைய வேலையை நன்ருக பகிரங்கப் படுத்த வேண்டும். இந்தியாவிற்கு ஏற்ற சந்தர்ப்பங்களை நன்ருய் ஆலோசனை செய்து அதற்கு ஏற்றபடி விளம்பரம் செய்ய வேண்டும். நாம் எந்த வேலையை ஏற்றுக் கொண்டோமோ, அந்த வேலையை சரிவரச்செய்வது தான் முதலாவது விளம்பரமாகும். ஆனல் ஜன சமூகத்துக்கு உண்மையாய் உபகாரம் நாம் செய்வோமாஞல் நாம் செய்யும் உபகாரத்தைப்பற்றி எல்லோருக்கும் தெரிவிப்பது சிலாக்கியமே யொழிய வேறில்லை. அவை யடக்கமா யிருந்தால், இவ்விஷயத்தில் சிலாக்கியமாகாது. ஆகையால் நாம் செய்யும் வேலையையும் அதன் நன்மையையும் யாவரும் அறியும்படி பகிரங்கப் படுத்துவது கடமையாகும். ஆனல் உண்மையைத்தவிர ஒரு சிறிதளவும் அதிகமாகக் கூறக்கூடாது என்பது கவனிக்கத்தக்கது. நாம் எதைச்செய்ய வில்லையோ அதை நாம்செய்ததாகக் கூறவும் கூடாது.

"எவ்விதம் விளம்பரம் செய்ய வேண்டும் என்பதைச் சிறிது கவனிப்போம். நமக்கு நன்ருய்த் தெரிந்தவர்களுக்கு கடுதாசி எழுதலாம். நேரில் கண்டு பேசலாம். இவ்விரண்டும் மிகவும் உபயோக முள்ளவையாம். நாம் செய்யும் கைங்கரியத்தைப் பற்றி எழுதி அச்சிட்டு காகிதங்களைப் பரவச்செய்யலாம். அச்சிடுவது அழகாய் அச்சிடாத போனல் கெடுதல் கூட உண்டு. வாரா வாரம், அல்லது மாதா மாதம், அல்லது 6மாதத்திற்கு ஒரு தடவை, அல்லது வருஷத்திற்கு ஒரு முறை அறிக்கைகளை அச்சிட வேண்டும். அவ்வறிக்கைகளை நன்ருயும் அழகாயும் அச்சிட்டு, ஏராளமாகப் பரவச்செய்ய வேண்டும். நாம் செய்யும் வேலையின் சிலாக்கியத்தில் நம்பிக்கை யுள்ளவர்களும், அதில் கொஞ்

சம் சம்பந்த முள்ளவர்களும், இக்காரியத்தைப்பற்றி அடிக்கடி பிரஸ்தாபிப்பது தான் மிகவும் சிலாக்கியமான விளம்பரமாகும்.'' மாதச் சந்தாக்களையும் இனம் கொடைகளையும் தவிர அடியில் கண்டபடி பொருள் தேடலாம்.

(1) உத்ஸவ தினங்களில் வீடு தோறும் சென்று பணம் தேடலாம்

(2) இராப்பள்ளிக்கூடத்திலேயே உண்டியல் பெட்டிகளை வைத்தல் நலம். பள்ளிக்கூடத்தைப் பார்க்க விருப்பமுள்ளவர்கள் மனமுவந்து அதில் ஏதாவது பணம் போடுவார்கள்.

(3) அந்த அந்த அதிகாரிகளின் சம்மதம் பெற்று பொது ஜனங்கள் கூடும் இடமாகிய கச்சேரிகள், போசனசாலை, சிற்றுண்டிச்சாலை வகையறுக்களில் உண்டியல் பெட்டிகளை வைத்தல் சிலாக்கிம்.

(4) வெள்ளை வெளுத்துத் தருவதாய் அதற்காக ஒரு ஆபீஸ் வைத்து அதன் வரும்படியை உபயோகித்தால் சிலாக்கியம். இவ்வரும்படியைக் கொண்டு ராயப்பேட்டையில் ஜனோபகார சபை நடக்கிறது.

(5) ஸர்கஸ்காரர், பாடகர்கள், நாடகக்கம்பேனியாரைக் கொண்டு இனம் ஆட்டங்களைக் கொடுக்கச் செய்து அதன் வரும்படியை உபயோகித்தல்.

(6) இராப்பள்ளிகளின் மாணுக்கர்கள் சுலபமாகச் செய்யக்கூடிய சிறு சாமான்களை விற்று அதன் வரும்படியை உபயோகித்தல். பட்டர், பாட்மிங்டன் பந்து, கூடைகள், கைக்குட்டைகள் செய்வது மிகவும் சுலபம்.

4. பள்ளியை எங்கு நடத்தல், அதற்கு வேண்டிய பலகை முதலியவைகளை சம்பாதித்தல்: நன்றாக ஒரு இராப்பள்ளியை நடத்துவதற்கு ஒரு பாரியான கட்டடமும்

ஏராளமான நாற்காலிகளும் அவசியமேயில்லை. அகலமும் நீளமும் உள்ள ஒரு வீட்டுத் திண்ணை அல்லது சத்திரத்துத் திண்ணை இருந்தால் போதும். அதில் மாணுக்கர்கள் தரையில் உட்காரலாம். அதுதான் பள்ளிக்கூடம். அநேகமாக பகற் பள்ளிக்கூடங்களிருக்கும் இடங்களில் அப்பள்ளிக்கூட அதிகாரிகளைக் கேட்டால், இராப்பள்ளியை அங்கே வைத்து நடத்த சம்மதிப்பார்கள். கொஞ்சம் வாடகை கேட்டாலும் கொடுத்து விடலாம். சென்னை கார்ப்பொரேஷன் பகற் பள்ளிகளில் இலவசமாய் இராப்பள்ளிகள் நடத்த அனுமதி கொடுத்திருக்கிறுர்கள் என்பது பிரசித்தப்.

ஆனல் முக்கியமாய் கவனிக்கவேண்டியதென்னவென்றால், மாணுக்கர்கள் இருப்பிடத்திற்கு மிக்கச் சமீபத்தில் இராப்பள்ளியிருத்தல்வேண்டும்.

5. இராப்பள்ளியின் உபகரணங்கள் புஸ்தகங்கள், கற்பலகை, எழுதுகோல் முதலியன. இவைகளை வாங்கி மாணுக்கர்களுக்கு இலவசமாகக் கொடுத்தல்வேண்டும்.

6. உபாத்தியாயர்கள். சிலர் அபிப்பிராயமென்னவென்றால், உற்சாகமுள்ளவர்களும் சம்பளத்துக்கு வேலை செய்யாதவர்களுமான உபாத்தியாயர்களை வைத்து நடத்துவது தான் சிலாக்கியம் என்கிறுர்கள். வேறு சிலர் சம்பளம் பெற்றுச் சொல்லிக்கொடுப்பவர்கள் இருப்பது தான் சரியென்கிறுர்கள். அனேகம் இராப்பள்ளிக்களைக்கொண்டு செலுத்தின அனுபவத்தால் பார்த்தால் இவ்விரண்டு முறைகளும் தனித்தனியே கையாளப்பட்டபோது சரியாக நடக்கவில்லையென்று தெரியவருகிறது. இதையெழுதுபவர் சில இராப்பள்ளிகளை வைத்து நடத்தியிருக்கும் அனுபவத்திலிருந்து சித்தமாயிருக்கிறது என்னவென்றால், சம்பளம் பெற்றுக்கொள்ளும் உபாத்தியாயர் பாதிப்பேர்களும் உற்சாகமுள்ள சம்பளம் பெற்றுக்கொள்ளாத உபாத்திமார் பாதிப் பேர்களுமாகக் கலந்து இருக்கப்பட்ட பள்ளிக்கூடம் தான் நன்றுய் நடத்

கிறது. கொஞ்சமும் தாமதமின்றி கணக்காய் வேலை செய்கிறவர் சம்பளம் பெற்றுக் கொள்ளும் உபாத்தியாயர் தான் வேலையை உற்சாகமாய் நடத்தவும் புதுபுது மாதிரியான யுக்தி சொல்லவும், பள்ளிக்கூடத்திற்கே ஒரு கௌரவம் உண்டு பண்ணவும், சம்பளம் பெற்றுக்கொள்ளும் உபாத்திமார் வேலையை மேற்பார்க்கவும் உற்சாகமுள்ள இலவச வேலைக்காரருக்கு இணையில்லை.

ஒரு பள்ளிக்கூடத்தில் இவ்விதமான சேர்க்கையிருப்பது மட்டும் போதாது. மாதமொரு முறையாவது இருவித உபாத்தியாயரும் சந்தித்துப் பள்ளிக்கூடத்தின் வேலையையும் அதை சிலாக்கியப்படுத்தும் முறையையும் பற்றிப் பேச வேண்டும்.

7. பள்ளிக்கூடத்திற்குக் காரியதரிசி அல்லது மேற்பார்ப்போன் வேண்டும். அவர் நிச்சய புத்தியும் ஆழ்ந்தயோசனையும் உள்ளவராயும் காரிய நிர்வாகத்தில் நிபுணராயும் இருத்தலவசியம் வெறும் உற்சாகம் மட்டுமிருந்தால் போதாது. இடையூறுகள், தவறுதல்கள், ஒற்றுமையின்மை, அவநம்பிக்கை தவறான எண்ணம் முதலிய பலவற்றால் மனமுறியாதவனாயும், அவைகளையே ஜயித்துக்கொண்டு போகக் கூடியவனாயும் இருக்கவேண்டும்.

8. பள்ளிக்கூட நேரம். மாணாக்கருடைய சௌகரியத்தை உத்தேசித்து அந்தக்காலம் நிர்ணயமாகவேண்டுமே யொழிய உபாத்தியாயருடைய சௌகரியத்தைக் கருதக் கூடாது. வேலையிடத்திலிருந்து நேரே பள்ளிக்குப்போகும் படியாகப்பள்ளிக்கூட நேரம் ஏற்படவேண்டும். ஏன் என்றால், கொஞ்சம் நேரம் இடையில் ஏற்பட்டால், வேலையாட்கள் எல்லாம் மற்ற இடங்களில் சென்று ஆக்ஷேபத்திற்கிடமான காரியங்களில் பிரவேசிப்பார்கள். அதற்கு அவகாசமிருக்கக் கூடாது. பள்ளிக்கூடத்தின் முதற் கால வகுப்பானது கவனத்தை அதிக சிரமப்படுத்த வேண்டாததாக இருத்தல் அவசியம். ஏன் என்றால், வேலைசெய்து விட்டுவரு

கிறவன் வரும்போது சிரமப்பட்டு வருவான். அவனுக்கு மனத்தளர்ச்சியும் ஓய்வும் வேண்டும். ஆகையால் முதல காலவகுப்பில் அநேகம் இராப்பள்ளிகளில் கதைசொல்லு வது, பாட்டுப்படிப்பது முதலிய விநோதமான பாடங்களை வைத்திருக்கிறார்கள். கதைகள் கற்பினை உள்ளவையாகவும் வேடிக்கையாகவும இருக்கவேண்டும். தினந்தோறும் கதை யாகவே யிருந்தால் ரம்மியமாயிருக்காதாகையால் இடை இடையே பாடல்கள், பாடவேண்டும், சில நாள் தின்பண்ட ங்கள், காபி, முதலிய கொடுக்கவேண்டும்.

9. இராப்பள்ளிகள் எவ்வளவு காலம் நடக்கவேண் டும்? இரண்டு, மூன்று மணி நேரம் இராப்பள்ளி நடந்தால் பகல் முழுவதும் வேலை செய்தவர்கள, அசௌகரியமாய் நினைப்பாரகள். ஆகையால ஒவ்வொரு கால அளவும் குறு கியதாயிருக்கவேண்டும். மொத்தமாக ஒன்றரை மணிக்கு அதிகப்படக்கூடாது, மேலும வருஷத்தின் பற்பல காலங் களுக்கேற்றவாறு பளளிக்கூட நேரமும் மாறவேண்டும். சீக் கிரம் இருட்டும மாதங்களில் பள்ளியை சீக்கிரம் வைத்து சீக்கிரம் முடிககவேண்டும். அறுவடை காலத்திலும் உற்சவ காலத்திலும, பள்ளிக்கூடத்தை மூடவேண்டும்.

10. கால விஷப அட்டவணை அவசியம். ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு கால வகுப்புக்கும் பாடங்களைக் குறிப்பட்ட அட்டவணையைத் தயார் செய்து அதை வழக் கத்தில் அனுசரிக்கவேண்டும்.

11, எதைக் கற்பிக்கவேண்டும்? பெரியவர்களானு லும் சிறியவர்களானாலும், சிறுவனானாலும், சிறுமியானாலும சரி, ஒவ்வொருவருக்கு எழுதவும படிக்கவும் கணக்குச்செ ய்யவும் கற்பிக்கவேண்டும். ஆங்கிலம் கற்பிக்கவேண்டி யதவசியமில்லை. ஆனால் அச்சுக்கோர்க்கிறவர்களுக்கு அது மிக உபயோகமுள்ள தாகையால் அதையும் கூடுமானால் கற்பிக்கலாம். ஒருவர் கூறுகிறபடி "சாதாரணப் பாடப்பு த்தகங்களையும, மதவிஷயமான புஸ்தகங்களை வாசித்தறி

யும்படி செய்யப்போதுமான தாய்பாஷையறிவையும், வீட்டுக் கணக்கை எழுதிவைக்கும்படிக்கும் பார்க்கும்படிக்கும் போதுமான கணக்கையும், தாய் நாட்டின் சரித்திரத்தில் முக்கியமான பாகங்களையும் சம்பவங்களையும், இவை போன்ற பிறவையும், சுகாதார ஞானத்தையும், வைத்தியர் வருவதற்கு முன் ஆபத்துகளில் முதல் சிகிச்சையும் நன்னடக்கையையும், அதன் தத்துவங்களையும், தான் பிறந்த மதத்தின் உண்மைகளின் முக்கிய பாகங்களையும், இராப்பள்ளிக்கூடத்தில் கற்பிக்கவேண்டும்."

12. மாணுக்கர்களுக்குத் தகுந்தபடி கற்பனு முறையைக் கொள்ளவேண்டும. அச்சடிப்பதற்காக எழுத்துக் கோர்க்கிறவர்களுக்கு ஆங்கிலமும் தாய் பாஷையும கற்பிக்கவேண்டும. மற்றைப்பாடங்களைக் காட்டிலும அவை தான் முக்கியம். அச்சியந்திரங்களைப் பற்றிக் கொஞ்சம் விவரஙகளும் கற்பிக்கவேண்டும். சமையல்காரர்களுக்குப் பாகத்திற்கு ஏற்ற வஸ்துக்கள் என்னென்னவென்றும் அவைகளின் விபரங்களையும், அவைகளை சுகாதார யோக்கியமாயும் சுத்தமாயும் பக்குவம் செய்யும் வழியையும கற்பிக்கவேண்டும் வியாபாரிகளுக்குக் கணக்கைப்பற்றி அதிகம கற்பிக்கவேண்டும. சிறுமிகளுக்கு வீட்டுச் சிக்கனத்தைப் பற்றிக் கற்பிக்கவேண்டும. அதாவது அவர்களுக்கு முக்கியமாக உபயோகமானவிஷயங்களை அதிகமாகவும் மற்றைப்பாடங்களைக் கொஞ்சமாகவும் கற்பிக்கவேண்டும.

13. தேகத்தை சுத்தமாக வைத்துக்கொள்ளும்படி கற்பிக்கவேண்டும வேலைக்காரர்களும் அவர்கள மக்களும், தம தேகத்தையும் உடைகளையும சுத்தமாய் வைத்துக்கொள்ளுகிறதில்லை யாகையால ஒருகால வகுப்பு நேரம தேகத்தை சுத்தமாய் வைத்துக்கொள்ளும் வழியைக்கற்பிக்கவேண்டும் சில இராப்பள்ளிகளில் உடம்பை சுத்தமாயும அழகாயும் வைத்துக்கொள்ளுவதற்குவேண்டிய சில சௌகரியங்களைக்கொடுக்கிறார்கள. அப்படிச் செய்வதால் மாணுக்

கர்கள் தங்கள் சரீரத்தையும் வஸ்திரங்களையும் நிர்மல மாய் வைத்துக்கொள்ளுவதுடன் பார்வைக்கு நேர்த்தியா யும் இருப்பார்கள்.

14. இராப்பள்ளிகளை ஜனரஞ்சமாகச் செய்யவேண் டும (1) நல்ல பாடகர்களைக் கொண்டு சிலகாலத்திற்கு ஒரு முறை பாட்டுக் கச்சேரிகள் நடததவேண்டும் (2) புகைப் படக் காட்சிகள் காட்டலாம். இதனால் விநோதமும் விவேக மும் கூடும் (3) மாணுக்கர்களைக் கூட்டிக்கொண்டு வேடிக் கை பார்க்கும இடங்களுக்குக் கூட்டிச் செல்லலாம். சென் னையில் கடற்கரை, காட்சிச்சாலை, மீன முதலிய ஜல ஜந்துக் காட்சிச்சாலை இவைகளுக்குக் கூட்டிப்போகலாம் (4) ள்ப ளிக்கூடத்தில் தையல் யந்திரமும் தையல் வேலை பழக்கிக் கொடுக்க ஒரு உபாத்தியாயரும இருக்கவேண்டும். இல்லா விடில் தச்சுவேலை பழக்கிக் கொடுக்க ஒரு உபாத்தியாயர் வேண்டும். ஏதாவது தொழிற்சாலையிருததல் வேண்டும் (5) மாதமொரு முறை மாணுக்கர்களுடைய தகப்பன்மாரைக் கூட்டி வைதது இராப்பளளிக்கூடத்தின பிரயோஜனத்தை அவர்களுக்கு விளக்கிக் கூறவேண்டும் (6) பெரிய மனிதர்க ள், சீமான்கள் சீமாட்டிகளைப் பள்ளிக்கூடத்தைப்பார்க்கும் படி அழைத்து அவர்களைக் கொண்டு மாணுக்கர்களுக்கு உற்சாககரமான வார்த்தைகளைக் கூறும்படி செய்யவேண் டும (7) பள்ளிக்கூடததிலிருந்து அனுப்பப்படும் சிறுவர் சிறுமிகளுக்கு நல்ல வேலை சம்பாதித்துத் தருவதற்காக ஒருகமிட்டி ஏற்படுத்தவேண்டும், பெரிய இடங்களில் வேலை கிடைக்கும் என்றும் அந்த விதமான செல்வாக்கு அக்கமிட் டியாருக்கு இருக்கிறதென்றும் தெரிந்தால் அநேக வேலைக் காரர்களபள்ளியில் சேர்ந்து படிப்பார்கள்.

மேற்கூறிய வழிகள் பள்ளிக்கூடத்தை ஜனங்களு க்கு ரஞ்சகமாக்கும் அப்படியானல் பள்ளிக்கூடம் நனருய நடை பெறும்.

இ. எஸ். சுநதரராஜன்,
கௌரவ காரியதரிசி, சட்டோபாத்தியாயர்,
சகோதர சங்கம், சென்னை,

பிரஹமக்ஞான தரிசனம் (பாலபாடம்)

அத்தியாயம் 41.

எண்ணத்தின் சக்தி—தொடர்ச்சி.

முந்தின அத்தியாயத்தில் துர் எண்ணத்தின் சக்தியைப் பற்றி விவரித்தோம். இப்போது நல்ல எண்ணத்தின் உபயோகத்தையும் அதினால் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களையும் கவனிப்போம். அந்தப்பாடங்களை நாம் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரவேண்டும். கெட்ட எண்ணங்கள் நமக்கு அயோக்கியர்களின் சகவாசத்தைக் கொடுக்குமாகில் நல்ல எண்ணங்கள் நல்லவர்களின் சேர்க்கையைத் தரும். ஆகையால் இவைகளெல்லாம் நம் கைவசத்திலிருக்கின்றன. நமக்கு வேண்டிய தோழர்களையும் சினேகிதர்களையும் சம்பாதிப்பதற்கு எவ்விதமான எண்ணங்களை நாம் அனுஷ்டித்துக் கொண்டுவரவேண்டுமென்பதை நாமே தீர்மானித்துக் கொள்ளலாம்.

இவ்விஷயங்களைப் பற்றி இதுவரை கேள்விப்படாத அனேகர்களுக்கு இந்த அறிவானது எவ்வளவு ஆனந்தத்தைக் கொடுக்கும். ஏனெனில் பகல் முழுவதும் ஓயாமல் வேலை செய்வதினால் ஒரு இடத்துக்குப் போகவாவது புஸ்தகங்களைப் படிக்கவாவது சாவகாசமில்லாதவர்களும் இராக்காலங்களில் கற்றுக்கொள்ளவாவது ஒரு சங்கத்துக்குப் போகவாவது அல்லது ஒரு இடத்தில் உட்கார்ந்து பேசவாவது முடியாமல் அவ்வளவுகளைத்துப் போயிருப்பவர்களுமான அனேக நல்ல ஜனங்களிருக்கிறார்கள்.

இவ்வித ஜனங்கள் பிரதிதினமும் காலையில் எழுந்தவுடன் ஒரு நிமிஷ நேரமாவது தான் அனுஷ்டிக்க வேண்டிய ஒரு நல்ல எண்ணம் இன்னதென்று தீர்மானிக்க வேண்டியது. அதாவது 'கடவுளின் பேரில் அன்பு' அல்லது 'ஒவ்வொரு மனிதனிடத்திலுமுள்ள நன்மையான பாகம்' அல்லது 'தனக்கு நேரமிருந்தால்' பிறருக்கு எவ்விதம் உ

பகாரம் செய்யலாம் என்ற விஷயம், இவைபோன்ற எண்ணங்களில் ஒன்றை நாள் முழுவதும் மனதுக்கு அடிக்கடி கொண்டு வந்து ஒழுகுவார்களாகில் இவ்வித எண்ணங்களை நினைத்துக் கொண்டிருக்கிற இகர ஜனங்கள் சீக்கிரத்திலாவது தாமதமாயாவது தங்கள் ஜீவகாலத்தில் சிநேகிதர்களாக வந்து சேருவார்கள். அதற்காக வேறொரு ஜன்மம் வரை காத்திருக்க மாட்டார்கள். இந்த ஜன்மத்திலேயே அனேகர் வந்து சேருவார்கள்.

எண்ணம் என்ன செய்யக்கூடும் என்பதைப் பற்றிய சொற்ப பாகம் தான் மேலே சொல்லப்பட்டிருக்கிறது. எண்ணமானது உண்மையான ஒரு பொருளென்பதை நீ யாதில் வைக்கவேண்டும் உலகத்திலுள்ள ஒவ்வொரு ரூபமும் உண்டாக வேண்டுமென்று கடவுள் சங்கற்பித்தார். அப்படியே உண்டாயின.

நம்முடைய மனதுகள் ஈசுவரனுடைய மனதின் ஓர் பாகம். ஆகையால் நம்முடைய எண்ணங்களும் சிருஷ்டிக்கக் கூடியவைகள். ஆனால் அவைகள் மிகவும் சொற்பமான வேலைகளாயிருக்கும். ஈசுவரனே ஒரு பிரஹ்மாண்டத்தை சங்கற்பிக்கிறார். நாம் சிறிய மானஸ ரூபங்களை நினைக்கிறோம். அவைகள் இதரர்களுக்கு நன்மை அல்லது கெடுதலைச் செய்கின்றன.

படுக்கை அல்லது நாற்காலியை விட்டு நகர முடியாத அனேக வியாதிஸ்தர்கள் இவ்வுலகத்தில் தாங்களிருப்பதில் யாதொரு பிரயோசனமுமில்லை யென்று சதா கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் அப்படியிருந்தாலும் அவர்கள் ஒரு விஷயத்தைப்பற்றி தெளிவாயும் பலமாயும் நினைக்க சக்தியுடையவர்களாயிருந்தால் சரீரபலமும் சௌக்கியமுமுள்ள தங்களுடைய சிநேகிதர்கள் போலவே தாங்களும் இதரர்களுக்கு நன்மை செய்யலாம். உபயோகமுள்ளவர்களாயுமிருக்கலாம்.

பிரதிதினமும் குறிப்பிட்ட ஓரேநேரத்தில் நினைக்கப்படும் உறுதியான எண்ணமானது அங்குமிங்கும் அவசரமாய் ஓடி சரீரப்பிரயாசையால் செய்யும் அனேக கடின

மானவேலைகளைப் பார்க்கிலும் அதிகப் பயனுள்ளதாம். உலகத்தில் தீர்க்காலோசனைக்காரர்களும் கிரந்தகர்த்தாக்களும் சரீரப்பிரயாசைப்பட்டு வேலைசெய்யாததினாலும் பெரிய தொழில்களை நடத்தாததினாலும் விருதாப்பொழுது போக்குகிறவர்களென்று அனேக ஜனங்கள் நினைக்கிறார்கள். அது மிகவும் தப்பிதம். எண்ணம் தான் செய்கையைத் தூண்டுகிறது.

பூலோகத்தில் வேலைசெய்கிறவர்கள் தங்களுடைய எண்ணங்களையும் நினைப்பதற்கு சாவகாசமுள்ள இதர ஜனங்களுடைய எண்ணங்களையும் செய்கைகளாகச் செய்கிறார்கள். உறுதியான எண்ணங்களை நினைத்துக் கொண்டிருப்பவர்கள் சரீரத்தினால் யாதொரு வேலையும் செய்யத்திராணியற்றவர்களாயிருப்பார்கள். அவ்விதமே சரீரத்தால் உழைத்துப் பாடுபடுகிற அனேகர் மனதினால் உறுதியாய் நினைக்க சக்தியற்றவர்களாயிருப்பார்கள்.

பிரஹ்மஞான சபையைச் சேர்ந்தவர்கள் மேற்சொன்ன இரண்டு விஷயங்களையும் செய்யவேண்டும். பிரஹ்மஞானத்தின் லக்ஷணம் யாதெனில் அது நம்மை நல்லவர்களாயிருக்க வேண்டுமென்று போதிப்பது மல்லாமல் நன்மையான செய்கைகளைச் செய்யவேண்டுமென்றும் அவைகளை எவ்விதம் செய்யவேண்டுமென்றும் சொல்லுகின்றது. நம்முடைய எண்ணங்களை நாம் தற்காக்கவேண்டுமென்று ஒவ்வொரு மதமும் சொல்லுகின்றது. ஏன் அவ்விதம் காக்கவேண்டுமென்பதற்கு முகாந்திரம் அனேக மதங்களில் சொல்லப்படவில்லை. வேறே எவ்விதத்தாலும் செய்யமுடியாத காரியங்களை எண்ணத்தினால் சித்திபெறலாமென்பதைப்பற்றியும் நாமனுப்புகிற எல்லா எண்ணங்களுக்கும் நாமே பொறுப்பாளிகள் என்பதைப்பற்றியும் அடுத்த அத்தியாயத்திற் சொல்லுவோம்.

வி. வெங்குசாமி ஐயர்.

சிறுவர் பக்கம்.

தேசாபிமானம்.

சிறுவர்களே, தேசாபிமான மென்பது என்ன என்று உங்களுக்குத்தெரியுமா? உங்களுடைய வீட்டை அலங்காரம் செய்வதிலும் அதை விருத்தி செய்வதிலும் உங்களுக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது? வேறொருவன் உங்கள் வீட்டில் அக்கிரமமாய்ப் பிரவேசித்து உங்களுக்கு உபத்திரவம் செய்தாலாவது அல்லது வீட்டிற்குக் கெடுதல் செய்தாலாவது நீங்கள் சகிப்பீர்களா? அவ்விதமே ஒருவன் தன் தேசத்தைப்பற்றி தன் சொந்த வீடுபோல் அவ்வளவு பிரியம் வைத்துக் கொள்வதுதான் தேசாபிமானம். இதைப்பற்றி உங்களுக்கு ஒரு சிறுகதை சொல்லுகிறேன்.

ஐரோப்பாக் கண்டத்தில் ஒலாந்தா வென்ற பெயரையுடைய ஒரு தேசமிருக்கிறது: ஆங்கிலபாஷையில் அந்த தேசத்தை ஹாலண்டு யென்று சொல்லுவார்கள். அதற்கு பள்ளமானபூமி யென்று அர்த்தம். அதன் மூன்று பக்கத்திலுமுள்ள சமுத்திர ஜலம் உயரமாயும் தேசமானது அதிகப் பள்ளமாயுமிருக்கிறது. சமுத்திர ஜலம் தேசத்திற்குள் வராமலிருக்கும் படியாய் தேசத்திற்கும் சமுத்திரத்திற்கும் இடையில் பலமான பெரியசுவர் எடுக்கப்பட்டிருக்கிறது. அத்தேசத்தார்கள் இந்தச் சுவற்றை யெப்பொழுதும் பாதுகாத்துக் கொண்டும் சதா மராமத்து செய்துகொண்டு மிருப்பார்கள். சிலசமயம் சமுத்திரத்தில் பெரிய அலைகள் அடிக்கும்போது ஜலமானது அச்சுவற்றுக்கு மேலே ததும்பும். அப்போது சமுத்திரமானது தேசத்தை எட்டிப்பார்ப்பது போலவும் அத்தேசத்தார்களை நோக்கி 'என்னுடைய இடத்தை நீங்கள் அக்கிரமமாய் எடுத்துக் கொள்ளலாமா'. வென்று சொல்லுவது போலும் காணப்படும். இவ்விதமாய் அமைக்கப்பட்டுள்ள அச்சுவற்றின் பக்கத்தில் ஒரு கிராமம் இருக்கிறது; அதில் 8 வயதுள்ள சிறுவனொருவன் இருந்தான், அவன்

பெயர் ஹொரேஷியோ. ஒருநாள் அவன் தன்னுடைய ஊரிலிருந்து 5-மைல் தூரத்திலுள்ள வேறொரு ஊருக்கு ஒரு அலுவலின்பேரில் போக நேரிட்டது. அவ்விரண்டு ஊர்களுக்கும் மத்தியிலுள்ள பாதையானது மேலே சொன்ன சுவர் ஓரமாய் ஏற்பட்டிருந்தது. அவ்விரண்டு கிராமங்களுக்கு மத்தியில் வேறே யாதொரு குடியிருப்பு மில்லை. ஹொரேஷியோ என்ற பையன் அடுத்த ஊரில் தன் அலுவலை முடித்துக்கொண்டு தன்னூருக்குத் திரும்பும் போது இராத்திரி 8 மணியாய் விட்டது. அவன் சுவர் ஓரமாய் வந்து கொண்டிருக்கும் பொழுது தன் ஊருக்கு இரண்டு மைல் தூரத்தில் அச்சுவற்றில் கை நுழையும்படியான ஒரு துவாரம் விழுந்து அதன் வழியாய் சமுத்திர ஜலம் வெகுவேகமாய் மோதியடித்து தேசத்திற்குள்ளே பிரவேசித்துக் கொண்டிருந்ததும் தவிர அந்த துவாரமானது வரவர அகன்றும் ஜலம் அதிகரித்துக்கொண்டுமிருந்தது. பையன் இதைப் பார்த்தான். அந்த இடமோ மனுஷ்ய சஞ்சாரமில்லாத இடம். அவன் வேகமாய் கூக்குறல் போட்டான். ஒருவரும் வரவில்லை கொஞ்சநேரத்தில் சுவர் இடிந்து தேசம் முழுவதும் அழிந்து ஜனங்களெல்லாம் மாண்டுபோவார்களென்று உணர்ந்தான். அவன் சற்றும் அதைரியப்படாமல் மண்ணையும் கல்லையும் கொண்டு அந்த துவாரத்தை அடைத்தான். தண்ணீர் அதை ஒரே அடியாய் தள்ளிவிட்டது. பிறகு அவன் தன் சட்டையைக் கழற்றி அத்துவாரத்தில் அடைத்தான் அதையும் ஒரே தள்ளாகத் தள்ளிவிட்டது. பையனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. இரண்டு மைல் தூரத்திலுள்ள தன்னூருக்குப் போய் மனுஷர்களைக் கூட்டிவந்து துவாரத்தை அடைக்கலாமென்றாலோ அதற்குள் மோசம் வந்துவிடும் என்பது நிச்சயம். பையனோ அளவற்ற தேசாபிமானமுள்ளவன். அவ்வித அபிமானமில்லாத வேறொரு பையனாக இருந்தால், நமக்கென்னவென்று வீட்டுக்குப் போய் விடுவான் "சற்று நேரத்தில்" தேசமும் பாழாகி அவனும் நாசமடைவான். ....

இந்த சமயத்தில் பையன் என்ன செய்தானென்று நினைக்கிறீர்கள்? அவன் சற்றும் அஞ்சாமல் தன் உயிரையும் பொருட்டாய் எண்ணுமல், சட்டையை தன் கையில் சுற்றிக்கொண்டு அதை அந்த துவாரத்துக்குள் விட்டு தண்ணீர் வராமல் அடைத்துக்கொண்டு பொழுது விடியும்வரை தண்ணீரை வரவிடாமலும் கையை எடுக்காமலும் நின்றுகொண்டிருந்தான். விடிந்ததின் மேல் அவ்வழியே சென்றவர்கள் இதைப்பார்த்து அனேக ஜனக்கூட்டத்துடன் வந்து பையனுடைய கையை எடுத்துவிட்டு துவாரத்தை அடைத்தார்கள். இவன் செய்த உபகாரததுக்காக அத்தேசத்தார்கள் அதிக வந்தனமளித்ததும் தவிர அத்தேசத்து அரசனிடம் இவனைக் கொண்டுபோய் இவனுடைய அற்புதமான செய்கையைப்பற்றி எடுத்துச்சொன்னர்கள். அரசன் பையனுடைய செயலுக்காக மெச்சி இவனைப்போல் தங்கத்தினுல் ஒரு உருவாரம் செய்வித்து அத்தேசத்துப் பிரதான பட்டினத்தின் மத்தியில் உன்னதமான மேடை ஒன்றைக் கட்டி அதில் அதை ஸ்தாபித்திருக்கிருர், அந்த உருவாரம் இன்றைக்கும் இருக்கிறது.

இவ்வித செயல்களை நீங்களும் செய்யமுடியும். அப்போது நம்தேசத்திற்கு நிகர் உலகில் இல்லையென்று சொல்லலாம்,

வி. வெங்குசாமி ஐயர்.

புத்தகவிமர்சம்.

சவுத் இந்தியன் ஆர்ட் காலரி:—எம். எஸ். சுந்தர சர்மா பி. ஏ. ரூ. 1—8—0 மதுரையில் திருமலை நாயக்கரால் கட்டப்பட்ட புது மண்டபத்தின் அழகுகளையும் பெருமையையும் விபரித்து ஆங்கிலத்தில் எழுதிய சிறிய புத்தகமிது. 9 சித்திரங்களுடன் கூடியது. ஸ்ரீமான் சுந்தரசர்மா அவர்களுடைய சித்திரத் தேர்ச்சியை நேயர்கள் அறியலாம். புதுமண்டபத்தின் அமைப்பின அழகையும் அதில் காணப்படும் சில யுருவங்களின் திருத்தமான வனப்பையும் பற்றி பிறருக்கு எடுத்துக்கூற ஸ்ரீசுந்தர சர்மாவைப்போல் அவ்வளவு தகுதியுள்ளவர்கள் கிடைத்தலரிது. சித்திர விளக்கங்களையும் சர்மா அவர்களே சமைத்துள்ளார். புது மண்டபத்தைப்பற்றி பற்பல பிசகான எண்ணங்கள் சாதாரணமாய் கொள்ளப்படுகின்றன. அதாவது அது வஸந்தமண்டபம் என்றும் அதற்குநான்கு பக்கங்களிலும் தண்ணீர் பாயச்சி மண்டபத்தைக் குளிர்ச்சியுடையதாகச் செய்வதற்காக சுற்றி நான்கு பக்கங்களிலும் பள்ளம் இருப்பதாகவும் கூறுவது வழக்கம். அதெப்படியல்லவென்றும் புது மண்டபமானது தெருவைவிட உயர்ந்த பீடத்தில் கட்டப்பட்டதென்றும், ஆனல் அப்பால் சுற்றி வீதிகள் உயர்ந்ததாலும் புதிதாக இரண்டு சார்பிலும் கல் மண்டபங்கள் கட்டியதாலும் நான்கு பக்கங்களிலும் பள்ளங்கள் ஏற்பட்டிருக்கிறதென்றும் போதிய சான்றுகளுடன் நிரூபித்திருக்கிறார். இந்தியச் சிற்பிகளுக்கு ஓர் உருவத்தைப் பார்த்து அதையே போன்ற சில யுருவம் சமைத்தல் முடியாதென்று வேறு ஒரு பிரட்டு எண்ணமானது பரவிவருகிறது. திருமலை நாயக்கர் சிலையானது தத்ரூபம் என்று நிரூபிக்கிறார். இன்னும் யாளியின் ரஹஸியத்தையும் வெளியிட்டிருக்கிறார். இப்புத்தகத்தை யாவரும் அவசியம் வாங்கிப்படிக்கவேண்டும். இப்புதகமானது அழகாக அச்சிட்டு கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. டாக்டர் சுப்பிரமணிய ஐயர் அவர்கள் எழுதியிருக்கும் முகவுரையானது மிகவும் மேன்மையானது. அதையும் யாவரும் அவசியம் படித்தானந்திக்கவேண்டியது.

இந்தியாவில் மிகப்பெரிதும் பழமையுமான வைத்தியசாலை எது?

188.-வருஷம் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்

சஞ்சீவி

பாலமித்ரா

300 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு ரூபா 1

வியாதியைப்பற்றி விபரமாய்தெரிவிப்போர்க்கு நன்றாய் ஆலோசனைசெய்து திருப்தியான விடை கொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்

இந்த

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிறார்கள்.

முதன்மையான

மருந்து சென்ற 35 வருஷகாலமாகப் உபயோகிப்போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையும் கொடுத்து பெரும்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

32 மாத்திரையின் விலை ரூ. 1

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
ஆதங்க நிக்கிரக
ஔஷதாலயம்
45, மேலக்கோபுர வீதி
மதுரை.

இருமல், கபம் காசம் இவைகளுக்கு சிறந்தமருந்து

காசாந்தக

மாத்திரைகள் டப்பி1க்குவிலை ரூ. 1

இதுவரை எங்கள் கேட்லாக்கை பார்த்திராவிடில் உடனே உங்கள் விலாசத்தை எழுதுங்கள் எவ்வித செலவில்லாமலும் இனாமாய் அனுப்புகிறோம்.

சிறுவர்க்கான கதை.

தண்டதாரன் கதை:—சொர்ணவேலன்

இக்கதையை வாசித்தால் குழந்தைகள் மிகவும் ஆனந்தப்படுவார்கள். பிரதி 1-க்கு 0—0—3

பள்ளிப்பையன்கள் சிறுமிகளுக்கு இனாமாகக் கொடுக்க மிகவும் ஏற்றது.

50-க்கு ரூ 0—6—0 100-க்கு ரூ 0-10-0,
200-க்கு ரூ 1-2-0

* * * *

தியாசபியால் உள்ள பிரயோஜனங்கள்.

ஏனங்குடி

வி. ராமசந்திர நாயுடுகாரு

ஜகத்குரு ஸ்தோத்திரத்துடன் கூடியது

விலை அணா 2) (தபாற்கூலி வேறு

* * * *

ஸாக்ரடீஸ்—புரொபஸர் ஆர். ரெங்காச்சாரியார், எம். ஏ.

விலை அணா 12]

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்
மதுரை